# ‘கோவிட்-19’ காரணமாக உங்களுக்கு நிதி உதவி தேவைப்படுகிறதா?



நடமாட்டக் கட்டுப்பாட்டு உத்திரவு அல்லது முழு-அடைப்பு ஒன்றின் காரணமாக உங்களால் வேலை செய்ய இயலவில்லை என்றால், **‘கோவிட்-19 பேரிடர்க் கால கொடுப்பனவு’ (COVID-19 Disaster Payment)**-ஐப் பெற நீங்கள் தகுதி பெறக்கூடும்.

நீங்கள் வேலை செய்ய இயலாவிட்டால், அல்லது பின் வரும் நிலைகளில் ஏதாவதொன்றின் போது **‘பெருந்தொற்று விடுப்பு பேரிடர்க் கால கொடுப்பனவு’ (Pandemic Leave Disaster Payment)**-ஐயும் உங்களால் பெற இயலுமாகலாம்:

- ‘கோவிட்-19’ இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட ஒருவருடன் நீங்கள் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர் என்ற காரணத்தினால், அல்லது உங்களுக்குக் ‘கோவிட்-19’ தொற்று இருக்கிறது என்ற காரணத்தினால் உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளுமாறு அல்லது நோய்க்காப்புத்-தடையில் இருக்குமாறு மாநில அல்லது எல்லைப்பகுதி சுகாதார அலுவலர் ஒருவர் உங்களுக்குச் சொல்லியிருந்தால்
- ‘கோவிட்-19’ தொற்று உள்ள ஒருவரை நீங்கள் பராமரித்துவந்தால்.

இன்னும் நீண்ட கால நிதியுதவிக்கும் நீங்கள் தகுதிபெறக்கூடும். உங்களுக்கு என்ன உதவி கிடைக்கக் கூடும் என்பதைத் தெரிந்துகொள்ள எமது ‘கொடுப்பனவு மற்றும் சேவை சோதனி’ **servicesaustralia.gov.au/paymentfinder**-யைப் பயன்படுத்துங்கள்.

கொடுப்பனவு ஒன்றை உங்களால் பெற இயலுமா என்பதைத் தெரிந்துகொள்ள **servicesaustralia.gov.au/covid19** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள் அல்லது இந்த ‘க்யூ.ஆர் குறியீ’ (QR code) ட்டினை ஸ்கேன் செய்யுங்கள்.

15433TA.2107 - Tamil